ில்

ப்பு

ஏலம் / பாசிட் / கார / ப்பட்டு, / விக்கப் / நேற்றும் / இது / றை அதி / நேற்று / தொகை / னாலும், / தெரி / றத்தில் / காரணத் / த்துறை / ன் படி / து. மறு / படும்,''

திர்

# போலி ஐ.எஸ்.ஐ., பதிவுடன் விற்பனை

## குடிநீர் தயாரிப்பு நிறுவனத்துக்கு 'சீல்'

**ஈரோடு, ஜூலை 21–**

பவானி அருகே, போலியாக ஐ.எஸ்.ஐ., தரச்சான்று பெற்றதாக கூறி, குடிநீர் பாட்டில் விற்பனை செய்து வந்த நிறுவனத்தை சீல் வைத்தனர்.

குடிநீர் பாட்டில்கள் தயாரித்து விற்பனை செய்யும் நிறுவனங்கள், ஐ.எஸ்.ஐ., தரச்சான்று பெற வேண்டும். இந்திய தர நிர்ணய ஆணையம், இச்சான்றை வழங்குகிறது.

ஈரோடு மாவட்டம் பவானி, தொட்டிபாளையம் அருகே, 'ஆனந்த் அக்குவா புராடக்ட்' என்ற பெயரில், 500 மில்லி, ஒரு லிட்டர், 5 லிட்டர் பாட்டிலில் குடிநீர் அடைத்து, ஐ.எஸ்.ஐ., தரச்சான்று பெற்றதாக கூறி விற்பனை செய்து வந்தனர்.

இவர்கள் ஐ.எஸ்.ஐ., தரச்சான்று பெறாமல், போலியாக ஐ.எஸ்.ஐ., பெயரை பயன்படுத்துவதாக, இந்திய தர நிர்ணய ஆணையத்தின், கோவை கிளைக்கு ரகசிய தகவல் வந்தது.

கிளை தலைவர் கலைவாணன் உத்தரவுப்படி, குடிநீர் தயாரிப்பு நிறுவனத்தை சோதனை செய்தபோது, போலியாக ஐ.எஸ்.ஐ., பெயரை பயன்படுத்தியது தெரியவந்தது. உடனடியாக அங்குள்ள பொருட்களை பறிமுதல் செய்து, நிறுவனத்தை சீல் வைத்தனர்.



■ பவானி அருகே ஐ.எஸ்.ஐ., தரச்சான்று பெற்றதாக கூறி போலியாக குடிநீர் தயாரித்து விற்பனை செய்து வந்த நிறுவன பொருட்களை, இந்திய தர நிர்ணய ஆணைய அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.



# 'குடிநீருக்காக உயிரை பணயம் வைக்கும் மலை கிராமத்தினர்

**சத்தி, ஜூலை 21–**

சத்தியமங்கலம் வனச்சரகத்தை சேர்ந்த, மலை கிராமத்தினர், குடிநீருக்காக, பல கி.மீ., உயிரை

பணம் இல்லை. வீட்டுக்கு, 500 ரூபாய் கொடுங்கள். மோட்டாரை சரி செய்து தருகிறேன்" என கூறியுள்ளார்.

இதனால் வேறுவழியின்றி